[பேரவைத் தலைவர்] [2024 ஜூன் 29

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2024), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

2024 ஜூன் 29]

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2024 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டத்தில் புதியதாகச் சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய 77(B) என்கின்ற பிரிவில் மேல்முறையீடு அதிகாரம் M.D.-மேலாண்மை இயக்குநருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை S.E./C.E.-க்கு வழங்கினால், இதனுடைய நோக்கம் நிறைவேறும் என்பதைச் சொல்லி, இதைப் பரிசீலிக்க வேண்டுகிறேன்.*

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியத்தில், ஏற்கெனவே, பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைமுறையில் இருக்கின்ற இடத்தில், septic tank-லிருந்து lorry மூலமாக கழிவுநீரை எடுத்துச் செல்லக் கூடாது என்பதுதான் சட்டம். ஆனால், அதை மீறி செய்கின்றபோது, தண்டனை என்பது பெரிய தொகையாக இருக்கிறது. சிறிய குற்றங்களுக்கு சிறிய தொகையாகவும், பெரிய குற்றங்களுக்கு நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்கவும், இரண்டு பகுதிகளாகப் பிரித்து இருக்கிறோம். S.E./C.E.-க்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. மேல்முறையீடு என்பது M.D.-க்கு இருக்கிறது. குறைவாக குற்றம் செய்தவர்கள், முதல்முறை குற்றம் செய்தால் ரூ.500/- என்றும், பிறகு ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- என்று வருகிறபோது, 60 நாட்களுக்குள்ளாக மேல்முறையீடு செய்வதற்கும் அனுமதி இருக்கிறது. எனவே, அது சரியாக இருக்கும்.*

@ 28-6-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேல்முறையீடு குறித்து விளக்கினார். அதை ஏற்றுக்கொள்கிறோம். அதேநேரத்தில், கழிவுநீரகற்றுவதைப் பார்க்கிற நேரத்தில், லேசாக மழை பெய்தால்கூட போதும், எங்கு பார்த்தாலும் தண்ணீர் நிற்கிறது. மூன்று நாட்களுக்கு முன்பு, லேசாகத்தான் மழைத் தூறல்; தண்ணீர் நிற்கிறது. அங்கு கழிவுநீர் வெளியேறக்கூடிய வாய்ப்பில்லாத காரணத்தால் தேங்கி நிற்கிறது. அதையெல்லாம் நிறைவேற்றுவதற்கு, எங்கும் கழிவுநீர், மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கின்ற சட்டம் என்னவென்று சொன்னால், பாதாள சாக்கடைத் திட்டம் இருக்கிறது. அதில் இணைப்பைப் பெறாமல், septic tank மூலமாக வைத்துக்கொள்கின்றனர். அரசின் அனுமதி பெறாமல் அதைச் சுத்தம் செய்வதற்கு சென்றால் அங்கு சில accidents நடக்கின்றன. அதையெல்லாம், தடுக்க வேண்டித்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, மழைநீர் வடிகாலாக இருந்தாலும் சரி அல்லது septic tank-லிருந்து வருகிற தண்ணீராக இருந்தாலும் சரி, எல்லா இடங்களிலும் கழிவுநீர் வாய்க்கால்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே தண்ணீர் தேங்கி நிற்பதற்குக் காரணம், பல்வேறு இடங்களில் சாலைப் பணிகள், மெட்ரோ திட்டப் பணிகள் போன்ற பல பணிகள் நடைபெறுகின்றன. அதனால்தான், தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதையும் ஆய்வு செய்து, சரி செய்துகொண்டிருக்கிறோம். எனவே, தண்ணீர் எங்கும் தேங்காத அளவிற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

2024 ஜூன் 29]

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னையை ஒட்டியுள்ள சுற்றுப்புற பகுதிகளில் மண் பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு போன்றவற்றைக் கருத்தில்கொள்ளாமல், குறிப்பாக, எந்தெந்தப் பகுதிகளில் இடமிருக்கின்றதோ அங்கு கழிவுநீரை எடுத்துச் சென்று கொட்டிவிட்டுச் சென்றுவிடுகின்றனர். இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். அடுத்த தலைமுறைக்கு நீர் வளத்தையும், மண் வளத்தையும் கொடுக்க வேண்டுமென்றால், நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது மிகவும் நவீனமான கருவிகள், tanker–கள் வந்திருக்கின்றன. ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் திட்டத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் subsidy–யை 35 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அப்படி, சுமார் 2,000 வாகனங்களை, யார் யாரெல்லாம் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுத்து, நீர் வளத்தையும், மண் வளத்தையும் பாதுகாப்பதற்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலமாக அனுமதி தரப்பட்டு, அந்த அனுமதி பெற்ற வாகனங்கள் மூலமாகத்தான் கழிவுநீரை எடுத்துச் செல்ல முடியும். அனுமதி பெற்றிருக்கிற வாகனங்களில் GPS கருவி பொருத்தப்பட்டிருக்கிறது. எங்காவது வேறு இடத்தில், தவறான இடத்தில் அவர்கள் கொட்டி விடுவார்களேயானால், அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, வாகனங்கள் பறிமுதல் செய்யக்கூடிய அளவிற்கு சட்டத்தில் வழிவகை இருக்கிறது. உங்களுக்கே தெரியும். ஏற்கெனவே, நீங்கள் DICCI என்ற ஓர் அமைப்பை டெல்லியிலிருந்து கொண்டுவந்து, உங்கள் முன்னால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அதிலே ஒப்பந்தம் போடப்பட்டு, அந்தப் பகுதியிலே வேலை செய்த துப்புரவுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, 60 பிள்ளைகளுக்குமேல் வாகனங்கள் வழங்கி, அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

[திரு. கே.என். நேரு] [2024 ஜூன் 29

எனவே, தவறான இடத்தில், எங்காவது நல்ல இடத்தில், அந்த கழிவுநீரை கொட்டிவிட்டு செல்பவர்களின்மீது கடுமையாக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அது செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

2024 ஜூன் 29]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2024), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 28-6-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.